SRI T. K. SUBBIAH : பல இடங்களில் Regional Transport Authority பஸ் விட வேண்டும் என்று கேட்டிருந்தும் அதை State Transport Authority நிராகரித்திருக்கிறார்கள். இவ்விதம் நிராகரிக்கப்பட்டது எத்தனை சதவீதம் என்பது சர்க்காருக்குத் தெரியுமா ? அப்படியானால் அதன் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

THE HON. SRI V. RAMAIAH : சாதாரணமாக இப்போது இருக்கின்ற அமைப்பின் படி ஒவ்வொரு ரூட்டிலும் எத்தனை பஸ் விட வேண்டும் என்று கேட்க வேண்டியது Regional Transport Authority-தான் என்பது உண்மை. ஆனால் இவ்விதம் கேட்கப்படுகிற எல்லா ரூட்டுகளையும் அல்லது பஸ்களையும் நன்றாக விசாரிக்கவேண்டியது டிரான்ஸ்போர்ட் கமிஷனருடைய பொறுப்பு. எந்தெந்த ஜில்லாக்களில் எத்தனை ரூட்டுகளில் இருக்கவேண்டும், அதில் எத்தனை எத்தனை பஸ்கள் விட வேண்டும் என்பது பற்றி நன்றாக பரிசீலனை செய்து தான் முடிவு எடுக்கவேண்டும். ஆகவே Regional Transport Authority கேட்கிற எல்லா ரூட்டுகளையும் State Transport Authority அல்லது டிரான்ஸ்போர்ட் கமிஷனர் நிராகரித்து விடுகிறார் என்று சொல்லுவதற்கில்லை.

Division of routes, screening, etc.

* 671 *Q.*—SRI V. K. KRISHNAMURTHY (on behalf of SRI S. LAZAR): Will the Hon. the Minister for Electricity be pleased to state what steps the Government have taken to make the spirit of the Government Order issued in August 1958 regarding the division of routes, screening, etc., mandatory on the Road Traffic Authorities, consequent on the judgment of the Supreme Court in Raman and Raman *v.* another, pronounced in February 1959 ?

THE HON. SRI V. RAMAIAH: Presumably the Member is under an impression that the direction issued in G.O. No. 2265, Home, dated 9th August 1958, is not being observed by Regional Transport Authorities and the Appellate Authorities as the rules issued under the Motor Vehicles Act. Government have no information so far that these directions have not been observed by any of the authorities. Therefore they have not considered it necessary to issue further instructions in this regard.

SRI A. VEDARATHNAM : ஸார், பஸ் முதலாளிகள் இந்த மாதிரி சுப்ரீம் கோர்ட்டுகளுக்குப் போவது இப்போது சர்வசாதாரணமாக இருக்கிறது. ஆனால் சாங்ஷன் செய்யப்பட்ட ரூட்டுகளில் பஸ் போக விடாமல் தடை உத்தரவும் வாங்கி விடுகிறார்கள். இவ்விதம் தடை உத்தரவு வாங்க முடியாமல், சாங்ஷன் செய்த ரூட்டுகளில், அதில் எம்மாதிரியான சச்சரவுகள் இருந்தாலும் அது முடிவு ஆகிறது வரையிலும், அந்த ரூட்டுகளில் பஸ் ஓடுவதற்கு அரசாங்கம் ஏதாவது முயற்சி செய்யுமா ?

THE HON. SRI V. RAMAIAH : இன்றைக்கு இருக்கக் கூடிய சட்டங்களுக்கும் கான்ஸ்டிட்யூஷனுக்கும் மரியாதை கொடுக்கவேண்டுமென்றால் சுப்ரீம் கோர்ட்டுக்கு போகிற யாரையும் நம்மால் தடை செய்ய முடியாது, தடை செய்யவும் கூடாது. ஆனால் கனம் அங்கத்தினர் அவர்கள் ஒரு காரியத்தை தெரிந்து கொள்ள வேண்டும், அதாவது பஸ் ஆப்ரேட்டர்கள் இம்மாதிரி கோர்ட்டுக்குப் போய் கொண்டிருக்கும்போது, என்ன நடக்கிறது என்று பார்த்தால், வேறு யாராவது ஹைக்கோர்ட்டில் ரிட்பெடிஷன் போட்டு ஒரு பஸ்ஸுக்கு பதிலாக இரண்டு பஸ் விடுகிறார்கள். ஆகவே கோர்ட்டுக்குப் போய்க் கொண்டிருப்பதால் முதலாளிகளுக்குத் தான் நஷ்டமே தவிர பொதுமக்களுக்கு எந்தவிதமான பாதகமும் இல்லை.

SRI K. VINAYAKAM: Sir, may I know whether the Hon. Minister is aware of the fact that these big bus magnates and big fleet-owners who own 50 or 60 buses and who manage to buy way the

bus routes from the small fleet-owners at Rs. 1 lakh and Rs. 1½ lakhs and if they did not submit to this kind of subjugation, they rush to the Supreme Court and High Court with a Writ Petition ?

THE HON. SRI V. RAMAIAH : Sir, I do not think I can prevent any legitimate transaction of buses. If I totally prohibit it, then all sorts of complications and difficulties will arise. This question has been constantly considered by the Government and at one time, the Government took a decision that there need not be any hardship imposed on transport permits. However, I am not aware that permits are being sold for Rs. 1 lakh and Rs. 1½ lakhs. If any such instance is brought to the notice of the concerned Regional Transport Authority, I am sure they have sufficient material and power to punish the offenders and also to see that such people are completely screened off for any future permits.

Sir, as for their going before the Supreme Court and the High Court, as I have earlier stated, I cannot prevent them from doing so. I do not think that the big fleet-owners stifle these small operators by going to the Supreme Court or the High Court. That is a different matter altogether.

SRI K. B. S. MANI : புதிதாக தனிப்பட்டவர்களுக்குக் கொடுக்கப்படும் பஸ் ரூட்டுகளையும், எக்ஸ் ஸர்வீஸ்மென்ஸ் அசோஸியேஷன் போன்ற ஸ்தாபனங்களால் நடத்தப்படும் பஸ் ரூட்டுகளையும் பொறுத்தவரையில், ஆர்.டி.ஏ., கமிஷனர் இவர்களால் ஸாங்ஷன் கொடுக்கப்பட்ட பிறகு ரூட்டில் பஸ் ஓடும் நிலையில், பழைய பெருச்சாளிகளாக இருக்கும் பெரிய பஸ் முதலாளிகள் சுப்ரீம் கோர்ட்டை இழுத்து, தங்கள் செல்வாக்கை உபயோகித்து, அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட அனுமதியை ரத்துசெய்யும்படி செய்கிறார்கள். இப்படிப்பட்ட கேஸ்களாவது சுப்ரீம் கோர்ட்டுக்குப் போகாத வகையில் சட்டத்தைத் திருத்த அரசாங்கத்தார் நடவடிக்கை எடுப்பார்களா ?

MR. SPEAKER : இதற்கு கனம் அமைச்சர் ஏற்கனவே பதில் சொல்லியிருக்கிறாரே !

THE HON. SRI V. RAMAIAH : ப்ளீட் ஓனர்களை பழைய பெருசசாளி என்று சொல்வது சரியல்ல என்று கூற விரும்புகிறேன். அவர்களுக்குத் திறமை அதிகமாக இருக்கிறது. அவர்கள் நீண்ட நாட்களாக அந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்கள் திறமை காரணமாக அதிக பஸ்களை வைத்துக்கொண்டிருக்கலாம். நான் ஏற்கனவே அளித்த ஒரு பதிலில், யாருக்கு பஸ் விட அனுமதி கொடுத்தாலும் அது சரியா இல்லையா என்று ஆராய்வதற்கு இரண்டு கட்டங்கள் இருக்கின்றன என்று சொன்னேன். முதலில் எஸ்.டி.ஏ.-யும் இரண்டாவதாக அதற்கு மேலே ஹைக்கோர்ட்டும் இருக்கின்றன. எனவே எல்லாம் முறைப்படி தான் செய்யப்பட்டுவருகிறதே தவிர, முறைகேடாக எதுவும் செய்யப்படவில்லை, யாருக்கும் விசேஷ சலுகையளிக்கும் முறையில் முடிவு எடுக்கப்படவில்லை என்பது எனக்குத் தெரிந்த தகவல். எனவே பெரிய ப்ளீட் ஓனர்களை பழைய பெருச்சாளி என்றோ புதுப் பெருச்சாளி என்றோ சொல்வதை விட்டுவிட வேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன்.

SRI M. C. MUTHUKUMARASWAMY : அதிகமாக பஸ்கள் வைத்திருக்கும் பெரிய பஸ் முதலாளிகள், தாங்கள் புதிய ரூட்டுகளுக்கு அனுமதி கேட்டால் அனுமதி கிடைக்கவில்லை என்ற காரணத்தால் தனிப்பட்டவர்களிடம் ஒப்பந்தம் செய்துகொண்டு அவர்களிடமிருந்து மறைமுகமாக அவர்களுக்குரிய ரூட்டுகளையும் வாங்கிக்கொள்கிறார்கள். அவர்கள் தனிப்பட்டவர்களிடமிருந்து ரூட்டுகளை அப்படிப் பெறுவதைக் கண்டுபிடிக்க அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது.

21st April 1960]

THE HON. SRI V. RAMAIAH : அதிகமாக பஸ்கள் வைத்திருப்பவர்கள், குறைவான பஸ்கள் வைத்திருப்பவர்கள், புதிதாக பஸ் தொழில் நடத்த ஆசைப்படுகிறவர்கள் இவர்கள் சம்பந்தமாக சமீபத்தில் ஒரு அரசாங்க உத்தரவு போட்டிருக்கிறோம். அதாவது, யார் யாருக்கு எந்தெந்த ரூட்டுகளை எந்தெந்தத் தகுதிகளின் பேரில் கொடுக்கவேண்டுமென்று உத்தரவு போட்டிருக்கிறோம். ப்ளீட் ஓனர்ஸோ, வேறு ஏதாவது கம்பெனிகளோ தனிப்பட்ட ஸ்தாபனங்களோ அந்த உத்தரவை மறைமுகமாக எதிர்க்க ஏற்பாடு செய்திருந்தால் அதை ஆர்.டி.ஏ.-வின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் அவர் எல்லாவற்றையும் பரிசீலித்துத்தான் முடிவு செய்கிறார்.

SRI V. K. KOTHANDARAMAN : ஒரு ப்ளீட் ஓனர் பெயரில் இன்னொரு ப்ளீட் ஓனர் பஸ் விடுவதைப் பற்றி அவர்கள் கவலைப் படுவதில்லை, நாமும் கவலைப்பட வேண்டியதில்லை. சமீபத்தில் போடப் பட்டுள்ள புதிய உத்தரவின் விளைவாக, சில யூனியன்கள், மத்தியதர வகுப்பினரான தொழிலாளர்கள் சங்கங்கள் ஆகியவைகளுக்கு 15 மைலுக்குட்பட்ட ரூட்டுகள் கொடுத்தால்கூட அவைகளையும் பிடுங்கிக்கொள்ளக் கூடிய முறையில் பிறர் ஹைக்கோர்ட்டிலோ சுப்ரீம் கோர்ட்டிலோ அப்பீல் போடும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இதைத் தடுப்பதற்காவது மத்திய தர வகுப்பினரான தொழிலாளர்கள் முதலியவர்களுக்கு சட்டத்தில் சலுகை காட்ட சர்க்கார் முயற்சிக்குமா ?

THE HON. SRI V. RAMAIAH : இப்போதுள்ள நிலைமையில் அத்தகைய நடவடிக்கையை எடுக்கவேண்டுமானால், யாரும் ஹைக்கோர்ட்டுக்கோ சுப்ரீம் கோர்ட்டுக்கோ போவதைத் தடை செய்ய வேண்டும். அது முடியுமா என்றால், அது கண்டிப்பாக முடியாது.

Road Transport Re-organization Committee

*672 *Q*.—SRI T. KARIA GOUNDER (on behalf of SRI S. LAZAR) : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) whether the views of the Government have been asked for, by the Union Government on the Report of the Road Transport Re-organization Committee ;

(*b*) if so, the matters on which views have been asked for ; and

(*c*) whether the said Report will be placed in the library of the Legislature ?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) Yes, Sir.

(*b*) The hon. Member is referred to the paper placed on the table of the House in connection with starred question No. 775.

(*c*) Yes, Sir. A copy of the Report has been furnished to the Library of the Madras Legislature.

MR. SPEAKER : I suggest that question No. 775, which also relates to the same subject, may be taken up now.

SRI S. M. ANNAMALAI : இந்தக் கேள்விக்கு மேஜைமீது வைக்கப் பட்டுள்ள பதில் ஏறத்தாழ 14 பக்கங்களுக்கு இருக்கிறது. அதைப் படிக்க மிக நேரமாகும். எனவே இக்கேள்விக்கு உபகேள்விகள் போட ஏறத்தாழ அரை மணி நேரம் வேண்டும்.

MR. SPEAKER : கனம் அங்கத்தினர் அந்த நோட்டை படித்துப் பார்த்தால்தானே உபகேள்விகளுக்கு அவ்வளவு நேரம் வேண்டுமா வேண்டாமா என்று சொல்ல முடியும் ?